முருகப்பெருமான் துணை

**மகான் கணபதிதாசர் அருளிய அனுகூல ஆசி நூல்**

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

11.10.2022, செவ்வாய்கிழமை

1. அருள் வடிவாக உலகை காக்கும்
ஆறுமுகப்பெருமானின் அவதார
தருமராசன் அரங்கமகான் கண்டு
தரணியோர் வணங்கி வருதலுற
2. வருகவே உலகமாற்றம் சடுதி
வையகம் அடையுமெனக் கூறி
பெருமைபட அனுகூல ஆசி
புகலுவேன் சுபகிருது தரிவை திங்கள்
3. திங்களிலே அறுநான்குதிகதி குசன்வாரம்
(சுபகிருது வருடம் புரட்டாசி மாதம் 24 ம் நாள் 11.10.2022, செவ்வாய்கிழமை)
தேசிகனுக்கு கணபதிதாசர் யானும்
ஓங்கார உலகம் அமைய உரைப்பேன்
உயிர்காக்கும் ஞானபண்டிதனான
4. ஆனதொரு அரங்கன் தேடலை
அனைவரும் வாய்ப்பாக ஏற்று
ஞானம் தேடி பிரணவக்குடிலை
நம்பிவர அனைவருக்கும் மாற்றம்
5. மாற்றம் அரங்கன் ஆசியாக
மாதவசியின் அனுகூலம் ஆகி
ஏற்றம் உலகோர் அடைவர்
எங்கிலும் ஆறுமுகன் வழிபாடாகி
6. ஆகியே சரவணச் சுடரின் பலம்
அனைவருக்கும் சித்தியாகி வாழ்வர்
அகிலமே பாதுகாப்புக் கண்டிட
அரங்கன் சூட்சும அவதார மகிமை
7. மகிமை மிகுதி ஆகி
மண்ணுலகம் ஞான வேலியை
அகிலம் பாதுகாப்புற அமைத்து
ஆளுமையும் ஞானத்தலைமையாக
8. ஆகவே தமிழகம் முதல்
அறிவிப்பேன் அகிலமெங்கும்
மகான் அரங்கனை ஏற்ற
மாதரும ஞானத் தலைமை
9. தலைமை பெருகி இனிதே
தரணியில் ஞான ஆட்சி
பிழை ஊழலில்லாத வண்ணம்
பேருலகம் நல்லஆட்சி காணும்

10. காணவே நடக்கும் நிலைமை
கண்ணியமிலா அபகரிப்பும்
ஞானமிலா சுயநல நடத்தையாக
நாடெங்கிலும் உண்டான சிக்கல்

11. சிக்கலனைத்தும் விளக்கமாக
செப்பிடுவேன் அரங்கனால் அகலும்
ஆக்கமான சேவையால் மாறி
அரங்கன் தயவால் அகிலம் நல் ஆட்சிபெறும்
அனுகூல ஆசி முற்றே

–சுபம்–